<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.5/2025</u>

2026–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19–ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மேகலா | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல்தகவல்அறிக்கை நகல் ம.சா.ஆ.1, விபத்து நடந்த நேரத்தை திருத்தம் செய்து தயாரித்த தனியறிக்கை நகல் ம.சா.ஆ.2, பிரேதகூராய்வுஅறிக்கை நகல் ம.சா.ஆ.3, இறப்புசான்று நகல் ம.சா.ஆ.4, வாரிசுசான்று நகல் ம.சா.ஆ.5, இறந்தவரின் ஓட்டுநர்உரிமம் நகல் ம.சா.ஆ.6, மனுதாரரர்கள் ஆதார்அட்டைநகல்கள் ம.சா.ஆ.7 வரிசை (எண்ணம்–5) எதிர்மனுதாரரின் வாகன பதிவு புத்தகம் ம.சா.ஆ.8, எதிர்மனுதாரரின் வாகனத்தின் மோட்டார்வாகனஆய்வாளர்அறிக்கை நகல் ம.சா.ஆ.9, எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.10, மாதிரிவரைபடம் நகல் ம.சா.ஆ.11, குற்றஇறுதிஅறிக்கை நகல் ம.சா.ஆ.12,

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>:

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. காவல்நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன். எந்த தேதியில் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. விபத்து சம்மந்தமாக பக்கத்தில் இருந்தவர்கள் தகவல்

சொன்னார்கள். அவர்கள் பெயர் தெரியாது. போன்மூலமாக சொன்னார்கள். என்கணவர் மீது அடையாளம் தெரியாத வாகனம் மோதியதாக சொன்னார்கள். நான் வீட்டில் இருக்கிறேன். என்கணவர் கடையில் வேலைபார்ப்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்கணவர் வருமான வரி செலுத்துபவர் கிடையாது. மனுவில் கூறியுள்ள பேருந்துக்கும் என்கணவர் இறந்துபோன விபத்திற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. நான் மனுவிலும் நிருபணவாக்குமூலத்திலும் கூறியுள்ள பேருந்து விபத்தில் சம்மந்தப்படவில்லை என்றால் சரியல்ல. நான் CCTV பதிவுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் நஷ்டஈடுகொடுக்க அவசியமில்லை என்றால்சரியல்ல. காவல்துறை தரப்பில் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் உண்மையானவை அல்ல என்றால்சரியல்ல.

<u>**மறுவிசாரணை:**</u>

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.